# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## கண்டிய திருமண, மணநீக்கம் (திருத்தம்)

***(113 ஆம் அத்தியாயமான) கண்டிய திருமண, மணநீக்கச் சட்டத்தினை திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரால் 2013, மாச்சு மாதம் 08 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

---

*(2013, பெப்புருவரி மாதம் 26 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

**[ 228 ஆம் சட்டமூலம் ]**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : 5.00**

## சட்டப்பயன் பற்றிய கூற்று

**வாசகம் 2:** *இவ்வாசகம், பிரதேச பதிவாளர் அல்லது மாவட்டப் பதிவாளருக்கான கட்டணங்களின் கொடுப்பனவு முறையினை குறித்துரைப்பதன்மூலம் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (113 ஆம் அத்தியாயமான) கண்டிய விவாக, மணநீக்கச் சட்டத்தின் 16 ஆம் பிரிவினைத் திருத்துகின்றது.*

**வாசகம் 3:** *இவ்வாசகம் கொடுப்பனவு முறையினைக் குறித்துரைப்பதன்மூலம் முதன்மைச் சட்ட வாக்கத்தின் 18ஆம் பிரிவினைத் திருத்துகின்றது.*

**வாசகம் 4:** *இவ்வாசகம் பதிவாளருக்கு செலுத்தப்படவேண்டிய கட்டணங்களை மீளாய்வு செய்வதன் மூலமும் கொடுப்பனவு முறையினைக் குறித்துரைப்பதன்மூலமும் 19ஆம் பிரிவினைத் திருத்து கின்றது.*

**வாசகம் 5:** *இவ்வாசகம் பிரதேச பதிவாளர் அல்லது மாவட்டப் பதிவாளருக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணங்களை தேவைப்படுத்துவதன்மூலம் 24ஆம் பிரிவினைத் திருத்துகின்றது.*

ச.வ.ஓ. 15/2013

## (113 ஆம் அத்தியாயமான) கண்டிய திருமண, மணநீக்கச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்*

**1**. இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின் ....... ஆம் இலக்க, கண்டிய திருமண, மணநீக்க (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன் 2013 சனவரி 1ஆம் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

*(113 ஆம் அத்தியாயமான) கண்டிய திருமண, மணநீக்கச் சட்டத்தின் 16 ஆம் பிரிவினைத் திருத்துதல்*

**2**. (இதனகத்துப் பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (113 ஆம் அத்தியாயமான) கண்டிய திருமண, மணநீக்க (திருத்தச்) சட்டத்தின் 16 ஆம் பிரிவானது, அதன் (6) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியினை இடுதல் வேண்டும் :-

> “(ஈ) விடயத்திற்கேற்ப விதித்துரைக்கப்பட்ட கட்டணக் கொடுப்பனவினை எண்பிப்பதற்காக பிரதேச பதிவாளர் அல்லது மாவட்டப் பதிவாளரால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு ஒன்றுடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்.”

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 18ஆம் பிரிவினைத் திருத்துதல்*

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவானது, அதன் (5) ஆம் உட்பிரிவில் “வெளிப்படுத்துகையானது, வெளிப்படுத்துகையைச் செய்கின்ற திறத்தவரினால் வழங்கப்பட வேண்டியதான விதித்துரைக்கப்பட்ட பெறுமதியையுடைய முத்திரை ஒன்றை அல்லது முத்திரைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்” என்னும் சொற்களுக்குப் பதிலாக “வெளிப்படுத்துகையானது வெளிப்படுத்துகையைச் செய்கின்ற திறத்தவரினால் செய்யப்பட வேண்டியதான விதித்துரைக்கப்பட்ட கட்டணக் கொடுப்பனவின் எண்பிப்பாக மாவட்ட பதிவாளரால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு ஒன்றுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.”.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 19ஆம் பிரிவினைத் திருத்துதல்*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 19ஆம் பிரிவானது அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவினை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(4) வெளிப்படுத்துகையானது மாவட்டப் பதிவாளர் அல்லது பிரதேசப் பதிவாளர் முன்னர் செய்யப்படுகின்ற விடத்து, அது நூறு ரூபா தொகைக் கொடுப்பனவினை அல்லது அமைச்சரினால் விதித் துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய வேறு தொகைக் கொடுப்பனவினை எண்பிப்பதாக மாவட்டப் பதிவாளரினால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும். அத்த கைய கட்டணங்கள் வெளிப்படுத்துகையைச் செய்கின்ற திறத்தவரினால் செலுத்தப்படுதல் வேண்டும்."

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 24ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**5.** முதன்மைச்சட்டவாக்கத்தின் 24ஆம் பிரிவானது அப்பிரி வின் (2)ஆம் உட்பிரிவினை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் உட்பிரிவினை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது :-

"(2) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ் செய்யப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பமும் விதித்துரைக்கப்பட்ட பெறுமதி கொடுப்பனவின் எண்பிப்பாக மாவட்டப் பதிவாளரால் அல்லது பிரதேச பதிவாளரால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு ஒன்றுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்."

*செல்லுபடி யாக்குதலும், நட்டோத்தர வாதமும்.*

**6.** இரண்டாயிரத்துப் பதின்மூன்றாமாண்டு சனவரி 1ஆந்தேதியிலிருந்து 2013, மாச்சு 31 ஆந் தேதியன்று முடிவடை யும் வரை, பதிவாளர் தலைமையதிபதியினால் அல்லது அவர் சார்பில் அல்லது விதிப்பதற்கு அல்லது சேகரிப்பதற்கு இச்சட்டத் தினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினால் விதிப்பனவு செய்யப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட எவையேனும் கட்டணங்கள், பதிவாளர் தலைமையதிபதியினால் அல்லது இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய எவரேனும் ஆளினால் செல்லு படியானமுறையில் விதிப்பனவு செய்யப்பட்டதாக அல்லது சேகரிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் :

ஆயின், இப்பிரிவின் மேற்கூறப்பட்ட ஏற்பாடுகள், மேற்கூறப்பட்ட காலப் பகுதியின் போது விதிப்பனவு செய்யப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட ஏதேனும் கட்டணம் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தினால் செய்யப்பட்ட ஏதேனும் முடிபை அல்லது கட்டளையை அல்லது ஏதேனும் நீதிமன்றத்தில் முடிவுறாதுள்ள எவையேனும் வழக்கு நடவடிக்கைகளைப் பாதித்தலாகாது.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**7**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்